பக்கங்கள்: 06

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:08 | 09.11.2023 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் போராட்டம் கைவிடப்பட்டது

சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட வாயிலை மூடி இன்று (09.11.2023) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களின் போராட் வெளியிட்ட அறிக்கையை திரும்பப்பெறுவதாக அறிவித்துள்ளதால் போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் 31




அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழை டத்தை அடுத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார்பாக ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு... (பக்:02)

# வைத்தியர்கள் இல்லாமையால் மூடப்படும் வைத்தியசாலைகள்

இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு வைத்தியர்கள் இல்லாமையினால் 20 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐயாயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற தயாராகவிருப்பதாக நாடளாவிய ரீதியாக முன்னெடுத்த ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாகஅரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.

ஐயாயிரம் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் பட்சத்தில் நாட்டின் சுகாதாரத்துறை பாரிய வீழ்ச்சியடையும். எனவே, அதனை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வைத்தியர்களின் தேவைப்பாடுகளை கண்டறிந்து அதனை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# கிரிக்கெட் அலுவலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு 7 இல் உள்ள வித்யா மாவத்தை, மைட்லண்ட் பிளேஸ் முனையில், உள்ள இலங்கை கிரிக்கெட் அலுவலகத்துக்கான நுழைவுப்பாதை முன்னிட்டு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. கிரிக்கெட் அலுவலகத்தின் முன்னால் போராட்டம் நடைபெறும் என கருதப்பட்டதால் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பான பாராளுமன்ற விவாதம் இன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் பாராளுமன்றத்தில் கூட்டுப் பிரேரணையை சமர்ப்பிப்பதன் மூலம் ஆரம்பமானது. பாராளுமன்ற உறுப்பினர் பிரேமதாச, இலங்கை ... (பக்:02)

# இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்த அமெரிக்கா

சீனாவுடன் போட்டியிடும் வகையில் இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் ஆழ்கடல் கப்பல் கொள் கலன் முனையத்தை நிர்மாணிப்பதற்கான 553 மில்லியன் டொலர் திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் மிகப்பெரிய முதலீடு ஆகும் இது. கடுமையான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கை போராடி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. சீனாவுடன் போட்டியிடும் வகையில், சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் முடக்கும் வகையில் அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளது. கொழும்பு துறைமுகம் 2021 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது, மேலும் இந்த புதிய முனையம் வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு பெரிய பொருளாதார வளர்ச்சியைக் கொடுக்கும். பசுபிக் கடலில், சீனக் கடலில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா தற் போது இந்திய பெருங்கடலில் காலடி எடுத்து வைத்துள்ளது. சீனாவின் ஆதிக்கத்திற்கு இது முற்றுப்புள்ளியாக அமையும் என்கிறார்கள்.

**‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’**

# யாழ்ப்பாண பல்கலைக்கழக....

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து கொண்டு சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் “நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்” என்ற தலையங்கத்திலே உரையாற்ற இருந்தார்.

இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரின் நெருக்குதலின் காரணமாக கைவிடப்பட்டது. இந்நிலையில் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம்மீளவும்அழைக்கப்பட்டு சட்டத்துறையிலே தனது உரையினை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தினை உருவாக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. இக்கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகவே மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.




# கிரிக்கெட் அலுவலகத்துக்கு..

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
கிரிக்கெட் சபையின் அலுவலகப் பொறுப்பாளர்களை பதவி நீக்கம் செய்வதற்கான கூட்டுப் பிரேரணையை முன்வைத்தார், இது ஆளும் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபா டி சில்வாவால் உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கை கிரிக்கெட்டின் அலுவலகப் பொறுப்பாளர்கள் பதவி விலக வேண்டும் மற்றும் புதிய விளையாட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது கட்சித் தலைவர்களின் கூட்டு நிலைப்பாடாகும்.

ஊழலற்ற, வெளிப்படையான கிரிக்கெட் நிர்வாகத்தை பராமரிக்க கிரிக்கெட் நிர்வாகத்திற்கு புதிய சட்டம் தேவை என்று கட்சித் தலைவர்கள் கருதுவதாக கூறப்படுகிறது.

## கிரிக்கெட் சபை தனி இராஜ்ஜியம் போன்று செயற்பட முடியாது – சஜித்

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் ஒன்றாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இருந்தாலும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு உட்பட்ட பாராளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழுவிற்கு, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் பிரசன்னமாகாதது பிரச்சினைக்குரிய விடயம் என்றும், பாராளுமன்றத்துக்கும் அமைச்சருக்கும் மேலாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் செயற்பட முடியாது என்றும் அது தனி இராஜ்ஜியம் அல்ல என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ள பாராளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் வியாழக்கிழமை (08) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மாற்று பாலினத்தவரும் கத்தோலிக்க ஞானஸ்நானம் பெறலாம்

மாற்று பாலினத்தவரும் கத்தோலிக்க ஞானஸ்நானம் பெற வத்திக்கானின் கோட்பாட்டு அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது. அவர்களே ஞானப் பெற்றோராக இருந்தும் தமக்குத்தாமே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் கத்தோலிக்க திருமணங்களில் சாட்சிகளாக இருக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.



பிறேஸில் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நெக்ரி என்ற பாதிரியார் ஒருவர் கடந்த ஜூலை மாதம் 6 கேள்விகள் அடங்கிய ஒரு தொகுப்பை வத்திக்கானுக்கு அனுப்பியிருந்தார். அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்தும், அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்குதல் குறித்தும் கேட்கப்பட்டிருந்தது. இந்தக் கேள்விகளுக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் வத்திகானின் நம்பிக்கைக்கான கோட்பாட்டுத்துறை பதிலளித்துள்ளது. போப் பிரான்சிஸ் ஒப்புதலுடன் கூடிய மூன்று பக்க கடிதத்தைப் பிஷப் ஜோசப் நெக்ரிக்கு அனுப்பி வைத்தது.

# இஸ்ரேல் தாக்குதலில் 10,569 பாலஸ்தீனியர்கள் பலி

காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் இதுவரை 10569 பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகிறது. இரு தரப்பிற்கும் இடையிலான போரில் பலரும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இப்போரை நிறுத்த உலக நாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், இஸ்ரேல் பிரதமர் தொடர்ந்து தாக்குதல் நடத்த உத்தரவிட்டுள்ளார். காஸா மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சு நடத்துகின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 214 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்ததாகவும் காஸாவில் இருந்து 70% மக்கள் வீடுகளை விட்டு ஐ.நா உள்ளிட்ட அமைப்புகளில் தஞ்சமடைந்துள்ளதாகத் தகவல் வெளியாகிறது.

# தீபாவளியன்று விளக்கேற்றி வழிபட இஸ்ரேல் தூதுவர் வேண்டுகோள்



ஹமாஸ் தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகள் வீடு திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்த தீபாவளிக்கு இந்தியர்கள் விளக்கேற்றி வழிபட வேண்டும் என இந்தியாவுக்கான இஸ்ரேல்தூதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நார் கிலான் எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள வீடியோ செய்தியில் கூறியிருப்பதாவது:

பகவான் ராமர் ராவண வதத்துக்குப் பிறகு நாடு திரும்பியதை ஒவ்வொரு தீபாவளியன்றும் மக்கள் விளக்கேற்றி கொண்டாடுகின்றனர். அதுபோல் இந்த தீபாவளிக்கு, இஸ்ரேல் பிணைக் கைதிகளும் நாடு திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்தியர்கள் விளக்கேற்ற வேண்டும், அப்போட்டோவை சுனுலை aofHope என்ற ஹேஸ் டேக்குடன் எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# காஸாவில் 50,000 பேருக்கு 4 கழிவறைகள் அமெரிக்க செவிலியரீன்

காஸா நிவாரண முகாம்களில் பணிபுரிந்துவிட்டு கடந்த வாரம் அமெரிக்காவுக்குத் திரும்பிய செவிலியர் ஒருவர், தனது சக ஊழியர்கள் குறித்தும், தன்னுடைய பணி அனுபவம் குறித்தும் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

காஸாவில் பாதுகாப்பான இடம் என்று ஒன்று கூட கிடையாது. எங்களைச் சுற்றிலும் குண்டுகள் வெடித்தன. என்னுடன் பணியாற்றிய சில சக ஊழியர்கள் ஒரு நொடிகூட மக்களை விட்டு வெளியேறவில்லை. சில நாட்கள் கம்யூனிஸ்ட் பயிற்சி மையத்திலிருந்தோம். அங்கு சுமார் 35,000 பேர் இருந்தனர். அங்கிருந்த குழந்தைகளின் முகம், கழுத்து, கை கால் முழுவதும் தீக்காயங்கள் இருந்தனர். மருத்துவமனைகள் நிரம்பியிருந்ததால், அவர்கள் சிகிச்சை பெறாமல் அங்கேயே இருந்தனர். 50,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கியிருந்த ஒரு முகாமில் நான்கு கழிவறைகள் மட்டுமே இருந்தன. ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.



# காஸாவில் போர் நிறுத்தம் கோராத ஜி7 அமைப்பு

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் 34 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், இஸ்ரேல் படைகள் காஸா நகரின் மையப்பகுதிக்குள் நுழைந்திருப்பதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. இதனிடையே, தற்காலிகப் போர் நிறுத்தம் மட்டுமே கோரியுள்ள ஜி7 கூட்டமைப்பு நாடுகள் முழுமையான போர் நிறுத்தம் தேவை என்பதை எங்கும் வலியுறுத்தவில்லை. அதேநேரம், நேற்றிரவு காஸாபகுதி முழுவதும் வான் வழித் தாக்குதலை தீவிரப்படுத்திய இஸ்ரேல், காஸாவின் முக்கிய மருத்துவமனைகளான அல்-ஷிஃபா மற்றும் இந்தோனேசியன் மருத்துவமனைகள் மீதும் குண்டுவீசி தாக்கின என்று ஹமாஸ் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளனர்.



# காஸாவில் 600 அமெரிக்கர்கள் சிக்கியுள்ளனர்

காஸாவில் கடந்த 24 மணி நேரத்தில் 80 இற்கும் மேற்பட்ட மனிதாபிமான டிரக்குகள் நுழைந்துள்ளன மேலும் 600 அமெரிக்கர்கள் இன்னும் பாலஸ்தீன பகுதியிலிருந்து வெளியேறவில்லை என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. செய்தியாளர்களிடம் பேசிய வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கிர்பி, “இதுவரை 400 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வெளியேறியுள்ளோம் என்பது எங்களுக்குத் தெரியும், குடும்ப உறுப்பினர்களைக் கணக்கிடும் போது சுமார் 500 முதல் 600 வரை மக்கள் காஸாவில் எஞ்சியுள்ளனர்.”

# தெற்கு சிரியாவில் இஸ்ரேல் தாக்குதல்

காஸாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்திவரும் வேளையில்,தெற்கு சிரியாவில் உள்ள இராணுவ தளங்களை குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியதாக சிரிய அரச ஊடகம் இராணுவ ஆதாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

# சிரியாவில் அமெரிக்க இராணுவம் தாக்குதல்

கிழக்கு சிரியாவில் உள்ள ஆயுதக் கிடங்கு ஒன்றில் அமெரிக்கப் படைகள் தற்காப்புத் தாக்குதலை நடத்தியதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) மற்றும் அதனுடன் இணைந்த குழுக்களால் பயன்படுத்தப்பட்ட வசதிக்கு எதிராக இரண்டு F-15 போர் விமானங்கள் தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் கூறினார்.

ஐ.ஆர்.ஜி.சியின் குட்ஸ் படையின் துணை அமைப்புகளால் ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்கப் பணியாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குப் பதில் இந்தத் தாக்குதல் அவர் கூறினார்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# மக்களின் குரலான பாராளுமன்றம் தனியார் குரலாக மாறுகிறதா?

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரசாங்கம் என்ற விதியை மாற்ற சிலர் முயற்சி செய்கின்றனர்.

மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளுக்காக விவாதம் நடத்த வேண்டிய பாராளுமன்றத்தை சிலர் தமது சுய விருப்பத் தேர்வாக மாற்ற முயற்சிக்கின்றனர். இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகச் சீர்கேட்டை உலகம் முழுவதும் உற்றுப்பார்க்கிறது. விளையாட்டு அமைச்சர் கிரிக்கெட் சபையை கலைத்துவிட்டு ஒரு குழுவை அமைக்கிறார். அந்தக் குழுவைப்பற்றி ஜனாதிபதிக்கு ஒன்றுமே தெரியாதாம். அதைக்கலைத்துவிட்டு ஜனாதிபதி அமைச்சரவையில் உபகுழுவை அமைக்கிறார்.

அமைச்சரால் வீட்டுக்கு அனுப்பப்பட்ட நிர்வாகிகள் நீதிமன்றத்துக்குச் சென்று நிவாரணம் பெறுகிறார்கள். இதனால் தமது கௌரவம் பாதிக்கப்பட்டதாக அவர் உணருகிறார். தனது மனக்குமுறல்களை எல்லாம் அமைச்சர் பாராளுமன்றத்தில் கொட்டினார். அது முற்று முழுக்க நீதித்துறைக்குச் சவால் விடுவதாக உள்ளது. தனிப்பட்டமுறையில் நீதிபதியையும் சாடியுள்ளார். நீதிமன்றத்தீர்ப்புக்கு மதிப்புக் கொடுத்த காலம் போய்விட்டதென்ற நிலைப்பாடு தோன்றியுள்ளது. குருந்தூர்மலை விவகாரத்தால் முல்லைத்தீவு நீதிபதி நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். சட்டத்தரணிகள் சங்கம் வழமைபோல கவலையுடன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) கவலை தெரிவித்துள்ளது. இலங்கை கிரிக்கெட் (SLC) க்கு இடைக்கால குழுவை நியமிப்பது மற்றும் நீதிபதி ஒருவரின் நடத்தை தொடர்பான வழக்கு தொடர்பாக கேபினட் அமைச்சர் ஒருவரின் குற்றச்சாட்டுகளால் கவலையடைவதாக BASL அறிக்கை ஒன்றை வெளியிட்டது மேல்முறையீட்டு நீதிமன்றம்.

தற்போது நடைபெற்று வரும் நீதிமன்ற வழக்குகள் மற்றும் நீதிபதிகள் தொடர்பான அறிக்கைகள், பாராளுமன்ற சிறப்புரிமைகளை மறைப்பதாகக் கூறப்படுவது, நீதித்துறையின் சுதந்திரத்திற்கு நேரடி அச்சுறுத்தலாகக் கருதப்படுவதாக BASL மேலும் தெரிவித்துள்ளது. பாராளுமன்றத்தின் கிணற்றில் நீதிபதி ஒருவர் நடந்துகொண்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் தன்மையைக் கருத்தில் கொண்டு, குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை விசாரிக்க சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற நபர்களை நியமிக்க வேண்டும் என்று BASL கருதுகிறது.

இலங்கை கிரிக்கெட்டுக்காக நியமிக்கப்பட்ட அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இடைக்கால குழுவின் மீதான வர்த்தமானியை இடைநிறுத்தி நேற்றைய தீர்ப்பு வழங்கியமை தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரன்சிங்க, நீதித்துறை மீது கடுமையான தாக்குதலை தொடுத்ததை அடுத்து BASL அறிக்கை வந்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று விஷேட அறிக்கையொன்றை வழங்கிய விளையாட்டுத்துறை அமைச்சர், இந்தத் தீர்ப்பு ஒரு கருத்தை மட்டுமே கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தியதோடு, நீதித்துறைக்கு எதிராக பல கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்காக விவாதம் செய்ய வேண்டிய பாராளுமன்றம் மக்கள் பணத்தில் தனி நபர்களை வீழ்த்தவும் காப்பாற்றவும் விவாதம் செய்துகொண்டிருக்கிறது. இது வரைகாலமும் ஊழலைப் பற்றிப் பெரிதாகப் பேசாத விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட்டில் உள்ள ஊழல்பற்றி காட்டமாகப் பேசுகிறார். சகல இடங்களிலும் களை எடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

# விஜயதாசவின் மகன் ஏன் குழுவில் நியமிக்கப்பட்டார்?

இடைக்கால கிரிக்கெட் குழு நியமிக்கப்பட்டது நல்லதுதான், ஆனால் அந்தக் குழுவிற்கு நியமிக்கப்பட்டவர்கள் குறித்து சந்தேகம் உள்ளது என தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த இடைக்கால குழுவில் விஜயதாச ராஜபக்ஷவின் மகன் ஏன் நியமிக்கப்பட்டார் என விஜித ஹேரத் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்:

கிரிக்கெட் வாரியம் ஒரு பக்கம் பணச் செல்வாக்கிலும் இன்னொரு பக்கம் அரசியலிலும் சிக்கித் தவிக்கின்றனர். கிரிக்கெட் வீரர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி விளையாடுகிறார்கள். பணத்திற்காக கிரிக்கெட் வாரியம் விளையாடுகிறது. இந்தச் செயலால் மக்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர். கூட்டுறவு கமிட்டிக்கும் வர கிரிக்கெட் வாரியம் விரும்பவில்லை.

கிரிக்கெட் நிர்வாகக் குழுவில் பல குடும்பங்கள் உள்ளன. சுமதிபால குடும்பம் சிறிது காலம் ஆட்சி செய்தது, பின்னர் தர்மதாச குடும்பம், பின்னர் ரணதுங்க குடும்பம் இந்த மூன்று குடும்பங்கள் மட்டும் பொறுப்பில் இருக்க வேண்டுமா? அர்ஜுன ரணதுங்க ஒரு திறமையான விளையாட்டு வீரர். ஆனால், நிர்வாகத்திற்கு ஏற்றதா? என்ற கேள்வி உள்ளது.

இடைக்கால கிரிக்கெட் குழு நியமிக்கப்பட்டது நல்லது. ஆனால் குழுவில் நியமிக்கப்பட்டவர்கள் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. விஜயதாச ராஜபக்ஷவின் மகன் எதற்காக நியமிக்கப்பட்டார்? தர்மதாசவின் குடும்ப உறுப்பினர் ஏன் நியமிக்கப்பட்டார்? அர்ஜுன திறமையான வீரர். இவரை இடைக்கால கிரிக்கெட் சபையில் நியமிக்கக் கூடாது.

நேர்மையானவர்களை பார்க்கும்போது. விளக்கக்காட்சியில், வேறொருவர் விளையாடுவதை நீங்கள் பார்க்கலாம் என்றார்.

# இலங்கையில் மிகப் பெரிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள மிகவும் அரிதான மற்றும் மிகப் பெரிய கல்வெட்டு, வரலாற்று சிறப்புமிக்க பொலனறுவை திம்புலாகல ஆரண்ய சேனாசன மலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலனறுவை தொல்பொருள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் தலைமையகத்தின் கல்வெட்டுப் பிரிவு அதிகாரிகள் மற்றும் பொலனறுவை தொல்பொருள் ஆய்வுக் குழுவினரால் இந்த அரிய கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டை நகலெடுக்க ஒரு மாதத்திற்கு மேலாகும் என தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் உரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய குழுவினர் திம்புலாகலை மலைத்தொடரில் தங்கியிருந்து கடந்த 26 ஆம் திகதி முதல் கல்வெட்டுப் பிரதி எடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் கல்வெட்டு சுமார் 45 அடி நீளமும் 18 அடி உயரமும் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சருக்கு ஆதரவளிக்க அமைச்சரவை உபகுழு தயார்

கிரிக்கெட் மாற்றங்கள் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரின் கருத்துகளை பெற்று ஆலோசனைகளை வழங்குவதற்கு அமைச்சரவை உபகுழு தயாராக இருப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டது, அணியையோ அல்லது பயிற்றுவிப்பாளர்களையோ தெரிவு செய்வதற்கு அல்ல எனவும் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவிக்கையில்

"உலகில் உள்ள மற்ற அணிகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இளம் கிரிக்கெட் அணி உள்ளது.

அவர்கள் மூத்த அணிகளுடன் போட்டியிட வேண்டும். அந்த மூத்த வீரர்களின் அனுபவம் மற்றும் திறமையை நமது அணி கருத்தில் கொள்ள வேண்டும்."

# திங்கட்கிழமை விஷேட விடுமுறை வழங்க கோரிக்கை

தீபாவளி பண்டிகை ஞாயிற்றுக்கிழமை(12) கொண்டாடப்படுவதால், வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்குமாறு வடமாகாணத் தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முந்தைய வருடங்களில் விடுமுறை நாட்களில் தீபாவளி தினம் வருமேயானால் திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வருடம் வடக்கு - கிழக்கு பாடசாலைகள் தொடர்பில் இந்த விடயத்தில் எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

எனவே, இதனைக் கருத்திற் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நள்ளிரவுடன் நிறைவு

தபால் ஊழியர்கள் ஆரம்பித்த 48 மணித்தியால அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை இன்று (09) நள்ளிரவுடன் முடிவுக்குவரும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. சுற்றுலா விடுதியொன்றை ஆரம்பிக்கும் போர்வையில் நுவரெலியா தபால் நிலைய கட்டடம் மற்றும் கண்டி தபால் நிலைய கட்டடம் என்பன விற்பனை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் ஊழியர்கள் நேற்று (08) முதல் பணிப்புறக்கணிப்புச் செய்தனர்.

எவ்வாறாயினும் தமது பிரச்சினைக்குரிய தீர்வை காண்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு வருகிறது ஜேர்மனியின் சொகுசுக்கப்பல்




ஜேர்மனியின் Aida Bella என்ற அதி சொகுசுக் கப்பல் நாளை கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இக்கப்பலில் 1900 பயணிகள் மற்றும் 730 பணியாளர்கள் வருகை தரவுள்ளதுடன், 13 அடுக்குகளை கொண்டுள்ள இக்கப்பலில் 1025 விருந்தினர் அறைகள், 12 மதுபான சாலைகள், 8 நீச்சல் தடாகங்கள், 3 ஒய்வறைகள் மற்றும் 7 உணவகங்களைக்கொண்டுள்ளது.

# மன்னாரில் புதிய காற்றாலை மின் நிலையம் அமைக்க திட்டம்

மன்னார் படுகையில் 250 மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றாலை மின் நிலையத்தை அமைப்பதற்காக, இந்தியாவின் அதானி குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நவம்பர் 25 ஆம் திகதி கைச்சாத்திடப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர். சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# தினேஷ் ஷப்டரின் காப்புறுதியை இடைநிறுத்த நீதவான் உத்தரவு

தினேஷ் ஷப்டருக்கு சொந்தமான இரண்டு உள்ளூர் காப்புறுதிகளை ஒரு



வார காலத்திற்கு இடைநிறுத்துமாறு இரண்டு தனியார் காப்புறுதி நிறுவனங்களுக்கு கொழும்பு மேலதிக நீதவான் திருமதி ரஜீந்திர ஜயசூரிய நேற்று (08) உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு காப்புறுதிகளிலும் பயனாளியாக மூன்றாம் தரப்பினரை ஷப்டர் குறிப்பிட்டுள்ளாரா என்பதைத் தீர்மானிக்கவே இந்த உத்தரவுக்கான காரணம் கூறப்பட்டது. ஷாப்டர் ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளராக இருந்தார்.







# தேவரயாளி இந்துக் கல்லூரியில் சிறுவர் சந்தை



# நெதர்லாந்தை வெளியேற்றிய இங்கிலாந்து

புனேயில் நடைபெற்ற 40 ஆவது லீக் போட்டியில் இங்கிலாந்து,நெதர்லாந்து ஆகியன மோதின. லீக் சுற்றுடன் அதிகாரபூர்வமாக வெளியேறிய நடப்பு சம்பியன் இங்கிலாந்து ஆறுதல் வெற்றி பெறும்முனைப்புடன் விளையாடியது. உலகக்கிண்ண சம்பியன்களை இந்தத் தொடரில் குப்புர வீழ்த்திய நெதர்லாந்து நம்பிக்கையுடன் போட்டியை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 339 ஓட்டங்கள் எடுத்தது. 37.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த நெதர்லாந்து 179 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இங்கிலாந்து 160 ஓட்டங்களால் வெற்றி பெற்று ஆறுதலடைந்தது.

ஜானி பேர்ஸ்டோ 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். துவக்க வீரர் டேவிட் மாலனுடன் அடுத்ததாக ஜோடி சேர்ந்து 2 ஆவது விக்கெட்டுக்கு 85 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த ஜோ ரூட் 28 ஓட்டங்களில் அவுட்டாக அடுத்ததாக வந்த ஹாரி ப் ரூ க் 11, கப்டன் பட்லர் 5, மொயின் அலி 4 ஓட்டங்களில் வெறியேறி ஏமாற்றத்தைக் கொடுத்தார்கள். 6 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்கள் எடுத்து தடுமரியது இங்கிலாந்து. அப்போது நங்கூரமாக நின்ற நம்பிக்கை நட்சத்திரம் பென் ஸ்டோக்ஸ் ஆரம்பத்தில் நிதானமாகவும் நேரம் செல்லச் செல்ல அதிரடியாகவும் விளையாடி தனது முதல் உலகக்கிண்ண சதத்தை அடித்தார். அவருடன் 7வது விக்கெட்டுக்கு 129 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்திய கிறிஸ் ஓக்ஸ் அதிரடியாக 51 ஓட்டங்கள் குவித்து அவுட்டானார். பென்ஸ்டோக்ஸ் 6 பவுண்டரி 6 சிக்ஸருடன் 108 (84) ஓட்டங்கள் குவித்ததால் 50 ஓவர்களில் இங்கிலாந்து 339 ஓட்டங்கள் எடுத்தது. நெதர்லாந்து சார்பில் பஸ் டீ லீடி 3 விக்கெட்டுகளை சாய்த்தார்.

340 என்ற கடினமான இலக்கை துரத்திய நெதர்லாந்துக்கு மேக்ஸ் ஓதாவுத் 5 , ஆக்கர்மேன் டக் அவுட்டானார். அடுத்த சில ஓவரிலேயே மறுபுறம் நிதானமாக விளையாடிய பரேசி 37 ஓட்டங்களில் வெளியேறினார். 3 விக்கெட்களை இழந்து 68 ஓட்டங்கள் எடுத்து தடுமாறிய நெதர்லாந்தை மிடில் ஆர்டரில் எங்கேல்பேர்ச்ட் 33, கப்டன் எட்வர்ட்ஸ் 38 ஓட்டங்கள் எடுத்து காப்பாற்ற போராடியும் பலனில்லை.

நம்பிக்கை நட்சத்திரம் பஸ் டீ லீடி 10 ஓட்டங்களில் அவுட்டாகி மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தினார். இறுதியில் நிதமனரு அதிரடியாக விளையாடி 41* ஓட்டங்கள் எடுத்த போதிலும் இதர வீரர்கள் உடனடியாகப் பெவிலியன் திரும்பியதால் 37.2 ஓவர்களில் 179 ஓட்டங்கள் எடுத்தது நெதர்லாந்து.

மொயீன் அலி , அடில் ரசித் ஆகிய ஸ்பின்னர்கள் தலா 3 விக்கெட்டுகள் சாய்த்தனர். இதனால் 6 ஆவது தோல்வியை பதிவு செய்த நெதர்லாந்து இந்த உலகக் கோப்பையிலிருந்து லீக் சுற்றுடன் அதிகாரபூர்வமாக வெளியேறியது.

மறுபுறம் 2 ஆவது வெற்றியை பதிவு செய்த இங்கிலாந்து புள்ளிப்பட்டியலில்7 ஆவது இடத்திற்கு முன்னேறியதுடன் கடைசி போட்டியில் வென்றால் 2025 சாம்பியன்ஸ் டிராபிக்கு தகுதி பெறலாம் என்ற நல்ல நிலைமைக்கு வந்து தங்களுடைய மானத்தைத் தக்க வைத்துள்ளது.



# ஓய்வை அறிவித்த அவுஸ்திரேலிய கப்டன் மெக் லானிங்

அவுஸ்திரேலிய மகளிர் அணியின் கப்டன் மெக் லானிங் திடீரென சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தனது ஓய்வு குறித்து லானிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், " சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலக முடிவு செய்வது கடினமாக இருந்தது. ஆனால், ஓய்வு பெறுவது இதுவே சரியான நேரம் என்று நினைக்கிறேன். 13 வருடம் சர்வதேச கிரிக்கெட்டை அனுபவிக்கும் அதிஷ்டம் எனக்கு கிடைத்துள்ளது. தற்போது, ஒரு புதிய ஆரம்பத்திற்காக செல்ல விரும்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



மெக் தனது 18 வயதில் 2010 இல் சர்வதேச அரங்கில் அறிமுகமானார். மெக் லானிங் அவுஸ்திரேலிய அணிக்காக 241 போட்டிகளில் (6 டெஸ்ட், 103 ஒருநாள் மற்றும் 132 டி20) விளையாடி 17 சதங்கள், 38 அரை சதங்களுடன் மொத்தம் 8,352 ஓட்டங்கள் எடுத்துள்ளார். மேலும், தனது பந்து வீச்சு மூலம் 5 சர்வதேச விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு தனது 21ஆவது வயதில் அவுஸ்திரேலிய அணியின் கப்டன் பதவியைப்பெற்றார். மேலும் இந்த நேரத்தில் கிரிக்கெட் வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான கப்டன்களில் ஒருவராக உருவெடுத்தார். அவரது தலைமையின் கீழ், அவுஸ்திரேலியா நான்கு ரி20 உலகக் கோப்பைகள், 1 ஒருநாள் உலகக் கோப்பை மற்றும் 1 காமன்வெல்த் விளையாட்டுப் பட்டங்களை வென்றது.

லானிங் கின் ஓய்வுடன் அவரது 10 ஆண்டுகால கப்டன்ஷிப் பணியும் முடிவுக்கு வந்தது. இப்போது இவருக்குப் பதிலாக அவுஸ்திரேலிய மகளிர் அணியின் புதிய கப்டனாக யார் நியமிக்கப்படுவார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்திய சுற்றுப்பயணத்திற்கு முன்னதாக, அவுஸ்திரேலிய அணி தனது புதிய கப்டனை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 09.11.2023 அன்று வெளியிடப்பட்டது.